NA

SINGAPORE – CAMBRIDGE
General Certificate of Education Normal (Academic) Level

# தமிழ்

தாள் 1

**1198/1**

**TAMIL**

Paper 1

**SPECIMEN PAPER**

*With effect from 2024 examination*

**2 hours**

Additional Materials: Main Answer Booklet

**தேர்வு எழுதுவோர்க்கான குறிப்புகள்**

1 ஒவ்வொரு பிரிவின் தொடக்கத்திலும் உள்ள குறிப்புகளை நன்கு படித்துப் புரிந்துகொண்டு அவற்றின்படி வினாக்களுக்கு விடையெழுத வேண்டும்.

2 விடைகள் அனைத்தையும் கொடுக்கப்பட்டுள்ள விடைப்புத்தகத்தில் எழுத வேண்டும்.

3 பயன்படுத்தப்பட்ட அல்லது பயன்படுத்தப்படாத எந்தவொரு விடைப்புத்தகத்தையும் தேர்வு நடைபெறும் மண்டபத்திலிருந்தோ அறையிலிருந்தோ வெளியே எடுத்துச் செல்லக்கூடாது.

4 அங்கீகரிக்கப்பட்ட தமிழ் அகராதிகளுள் ஒன்றினைப் பயன்படுத்தலாம்.



Singapore Examinations and Assessment Board

©MOE

‘அ’ பிரிவில் ஒரு வினாவுக்கும் ‘ஆ’ பிரிவில் ஒரு வினாவுக்குமாக மொத்தம் <u>இரண்டு</u> வினாக்களுக்கு விடையளிக்கவும்.

## ‘அ’ பிரிவு (மின்னஞ்சல்)

**பின்வருவனவற்றுள் ஏதேனும் <u>ஒன்றுக்கு</u> மட்டும் 90 சொற்களுக்குக் குறையாமல் விடை எழுதவும்.** (20 மதிப்பெண்கள்)

**1** பின்வரும் உனது நண்பரின் மின்னஞ்சலைக் கவனமாகப் படித்து அதற்குப் பதில் எழுதவும்.

[redacted]

| | |
|---|---|
| அனுப்புநர்: | barathi@kgoomail.com |
| பெறுநர்: | komathi@kgoomail.com |
| தேதி: | 02/09/2024 |
| பொருள்: | வீட்டுவேலை செய்தல் |

அன்புள்ள கோமதி,

நானும் என் உடன்பிறந்தவர்களும் வீட்டுவேலைகள் செய்வதை வழக்கமாக்கிக்கொள்ள வேண்டும் என்று என் பெற்றோர் சென்ற வாரம் கூறினர். நாங்கள் கொடுக்கப்படும் வீட்டுவேலைகளைப் பொறுப்புடன் செய்ய வேண்டும் என்றும் அவர்கள் அறிவுறுத்தினர்.

என் அண்ணனும் தங்கையும் அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட வீட்டுவேலைகளைச் செய்வதற்கு எந்த மறுப்பும் தெரிவிக்கவில்லை. ஆனால், இதுவரை வீட்டுவேலை செய்து பழக்கமில்லாத எனக்கு அதில் விருப்பமில்லை. மேலும், வீட்டுவேலை செய்ய எனக்கு நேரமும் இல்லை. நான் பள்ளிப்பாடங்களைப் படிக்க வேண்டியிருப்பதோடு வீட்டுப்பாடங்களையும் செய்ய வேண்டும். எனக்குக் கொடுக்கப்பட்ட வீட்டுவேலையை நான் செய்யாததை அறிந்து என் குடும்பத்தினர் என்மீது மனவருத்தத்துடன் இருக்கின்றனர்.

நீ என் நிலையில் இருந்தால் என்ன செய்வாய் என்பதையும் அதற்குரிய காரணங்களையும் என்னுடன் பகிர்ந்துகொள்கிறாயா? உன் பதிலை எதிர்பார்த்துக் காத்திருக்கிறேன்.

மிக்க நன்றி.

பாரதி

**2** பின்வரும் தகவலைப் படித்து அதற்கு மின்னஞ்சல்வழியே பதில் எழுதவும்.

உன்னை மணியாகக் கற்பனை செய்துகொள்ளவும். நீ பல ஆண்டுகளாக வசித்துவரும் குடியிருப்புப்பேட்டையில் மூத்த குடிமக்களுக்குரிய வசதிகள் போதுமான அளவில் இல்லாததை உணர்கிறாய்.

மூத்த குடிமக்களுக்கு எத்தகைய வசதிகளை வழங்கலாம் என்பதை விளக்கி நகர மன்ற அதிகாரிக்கு ஒரு மின்னஞ்சல் எழுதவும். அத்துடன் அவ்வசதிகள் அவர்களுக்கு எவ்வழிகளில் பயனளிக்கும் என்பதையும் குறிப்பிடவும்.

## 'ஆ' பிரிவு (கட்டுரை)

**பின்வரும் தலைப்புகளுள் ஏதேனும் ஒன்றுக்கு மட்டும் 170 சொற்களுக்குக் குறையாமல் விடை எழுதவும்.** (40 மதிப்பெண்கள்)

**3** வெவ்வேறு இனத்தவர்களை நண்பர்களாகப் பெற்றிருப்பதால் நாம் அடையும் நன்மைகள்.

**4** நீ சிறுவயதிலிருந்தே மற்றவர்களுடன் பேசிப் பழகுவதற்குக் கூச்சப்படுவாய். ஆனால், அண்மையில் நடந்த ஒரு சம்பவம் உனது கூச்சத்தைப் போக்க உதவியது. அந்தச் சம்பவத்தையும் அதனால் உனக்கு ஏற்பட்ட மனவுணர்வுகளையும் விளக்கி எழுதவும்.

**5** பின்வரும் தொடக்க வரிகளைக்கொண்டு கதையை எழுதி முடிக்கவும்:

நான் அந்தச் சிறிய தாளைப் பதற்றத்துடன் தேடிக்கொண்டிருந்தேன். அதனை வைத்த இடம் எனக்கு நினைவிருக்கிறது. ஆனால், அது இப்போது அங்கு இல்லை. அது எங்கே போனது? அந்தத் தாள் எனக்கு அவசரமாகத் தேவைப்படுகிறது. தொடர்ந்து அதைத் தேடிக்கொண்டிருந்தபோது, நான் ...

முற்றும்

**BLANK PAGE**

*Copyright Acknowledgements:*

The Singapore Examinations and Assessment Board has made every effort to trace copyright holders, but if we have inadvertently overlooked any, we will be pleased to make the necessary arrangements at the first opportunity.